முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.04.2019, புதன்கிழமை

1. **தருமராசனே அரங்கா போற்றி**
   **தரணி காத்திடும் தேசிகா போற்றி**
   **கருமவினைகளை வென்று மக்களை**
   **கலியுகத்தில் மீட்க வேண்டியே**
2. வேண்டியே அவதாரம் புரிந்த
   வேலவனாரின் சூட்சும குருராசனே
   தொண்டுமிகு உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
3. ஆசியை **விகாரி தகரின் திங்கள்**
   **அறிவிக்க லாபதிகதி புந்தி வாரம்**
   **(விகாரி வருடம் சித்திரை மாதம் 11ம் நாள் 24.04.2019, புதன்கிழமை)**
   **ஆசிபட திருஞானசம்பந்தர் யானும்**
   அருளுவேன் உலகோர் நலம் பெற
4. நலம் தரும் ஞான சக்தியாக
   ஞானிகளின் சீடர் பெருமக்கள்
   வலம் வருகின்ற காலம் தன்னில்
   வலிய உலக மக்கள் அணுகி உதவி
5. உதவி அன்னதான நெறி
   உயர்வாய் வளர வகை செய்து
   பூதலத்தில் தருமபலம் பெருக்க
   பூவுலகே புண்ணிய உலகமாகும்
6. ஆகவே அரங்கமகான் கொள்கை
   அறநெறிக் கொள்கையாக பரவ
   வகைபட ஏற்று வரும் மக்கள்
   வணங்கி நாளும் தொடர
7. தொடர்ந்து ஞானிகள் பூசை
   திங்கள்தோறும் செய்து கொண்டு
   சுடரெனும் சரவண ஜோதி ஏற்றி
   சுத்தநெறி பிசகா மக்கள் தொடர
8. தொடரவே கலிகாலம் தன்னில்
   தீங்குகள் அனைத்தும் விலகும்
   இடரில்லா வாழ்வும் வளமும்
   எல்லா மக்களும் அடைந்து சிறப்பர்
9. சிறப்பு தரும் உலக மாற்றத்துக்கு
   சித்தி தரும் கொள்கை அருளும்
   ஆறுமுக அரங்க ஞானியரின்
   அனைத்து செயல்பாடுகளை ஏற்று

10. ஏற்று அரங்கனே சிறந்த குரு
என ஏற்று மக்கள் வணங்கிட
பற்றிய கருமவினை விலகும்
பரமானந்த மேல்நிலை எட்டும்

11. நிலைபட ஞானசித்தி கூடி
நிலவுலகோர் ஞான வழியில்
நிலை கூடி ஞானி ஆவர்
நிகழ்த்திய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களைச் செய்து தருமத்தின் அரசனாக விளங்குகின்ற தருமராசனே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி. உலகைக் காத்து வழிநடத்தும் ஞானதேசிகனே போற்றி போற்றி. கருமவினைகளை வென்று மக்களை கலியுகத்தின் துன்பங்களில் இருந்து மீட்கவே அவதாரம் புரிந்திட்ட முருகப்பெருமானே அரங்கமகா தேசிகனே, முருகப்பெருமானின் சூட்சுமமே, உலகை வழிநடத்தும் குருராஜனே, சற்குருநாதனே, அரங்கமகா தேசிகனே, அற்புதங்கள் மிகுந்த உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 11ம் நாள் 24.04.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே திருஞானசம்பந்தர் யானும் உலக நலன் கருதி உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருஞானசம்பந்தர்.

எல்லா நலங்களையும் வளங்களையும் தந்தருளுகின்ற மகா ஞானசக்தியாக ஞானிகளின் சீடர் பெருமக்கள் எல்லாம் இவ்வுலகை வலம் வருகின்ற காலம் இது. ஆதலினாலே உலக மக்களெல்லாம் உங்களை நோக்கி வருகின்ற போதினிலே சீடர் பெருமக்களை அன்புடன் நடத்திடுங்கள். உத்தம மகா ஞானி யுகமாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆங்கே நடக்கின்ற அன்னதானப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்து அரங்க மகான் மேற்கொள்ளும் அன்னதானப் பணிகள் வளர்ந்திட உதவிகளை செய்து உலகின் தருமபலத்தினை ஒன்று கூடி பெருக்கிட இந்த உலகமே புண்ணிய உலகமாக மாறிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூய எளிய ஞானக் கொள்கைகளான அறநெறி கொள்கைகளை மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு உலகமெலாம் அரங்கரின் கொள்கைகள் அறநெறி கொள்கைகளாக பரவிட அரங்கரின் கொள்கைகளை மக்கள் ஏற்று வணங்கி வருவதுடன் ஞானிகள் பூஜைகளையும் தவறாமல் செய்து வர வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஒரு தினத்தினில் மக்களெல்லாம் ஒன்றுகூடி, சரவணஜோதி சுடர்தனை ஏற்றி வைத்து, ஞானிகளை வணங்கி வருவதுடன் முருகப்பெருமானையும் ஜோதியினுள் தோன்றி அருள் செய்திடுமாறு வேண்டுகோள் வைத்து வழிபாடுகளை செய்து வருவதுடன் அரங்கன் உபதேசித்த தூயநெறியில் இருந்து தவறாமல் நடந்து வரவேண்டும்.

இவ்விதமே மக்கள் தவறாமல் பூஜைகள் செய்தும், தர்மங்களைச் செய்தும் வரவர, மாமாயை சூழ்ந்திட்ட கலியுகமும் மாறி தீமைகள் அனைத்தும் உலகினின்று படிப்படியாக விலகிவிடும். மக்கள் துன்பம் இல்லாத வாழ்வையும் வளமான வாழ்வையும் பெற்று சிறப்படைவார்கள்.

உலகிற்கு எல்லா நன்மைகளையும் தந்தருளும், உலகப் பெருமாற்றம் நிகழ்ந்திட வெற்றிகளை தருகின்ற மார்க்கமாம் அரங்கமகான் மக்களுக்கு உபதேசிக்கும் கொள்கைகளை ஏற்பதுடன் உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் ஆற்றுகின்ற செயல்பாடுகளையும் ஏற்றுக் கொள்வதுடன் அரங்கரை குருவாய் ஏற்றுக் கொண்டு மக்களெல்லாம் வணங்கி வர வேண்டும்.

மக்களெல்லாம் அரங்கரே சிறந்த குரு என ஏற்றுக் கொண்டு வழிபாடுகளை செய்தும், அரங்கரின் தர்மத்தை கடைப்பிடித்தும் வரவர, மக்களைப் பற்றிய கர்மவினைகள் எல்லாம் விலகி, பரமானந்த மேல்நிலையை அடையும் வழிகளை பெறுவர். அவர்களுக்கு ஞானஅறிவும் பெருகி ஞானவழியினில் வாழ்ந்து நிலைஉயர்ந்து ஞானிகளாகவும் ஆகிடுவார்கள் எனக் கூறுகிறார் மகான் திருஞானசம்பந்தர்.

–சுபம்–